# DEPOSITION OF WITNESS

## IN THE COURT OF : SUBORDINATE JUDGE'S COURT, SIVAGANGAI.

Original Suit : **OS** . 55/2014 Plaintiff : PW.3

Deposition of Witness of Defendant: DW

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | திருமதி. ரமாசித்ரா | District | : | |
| Father/ Husband name | : | திரு. சோமசுந்தரம் | Calling | : | |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | /2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 2573 of the day of 18.02.2026

**முதல் விசாரணை:**

நான் மதுரை வட்டார தடய அறிவியல் ஆய்வகத்தில் அறிவியல் அலுவலர் மற்றும் ஆவண நிபுணராக பணிபுரிந்து வருகிறேன். தாவா வழக்கில் எங்கள் அலுவலகத்திற்கு வந்த அழைப்பாணையின் அடிப்படையில் தாவா வழக்கில் சாட்சியமளிக்கிறேன். மேற்படி அழைப்பாணையில் குறிப்பிட்டுள்ள ஆவணங்களை ஆய்வு செய்து அறிக்கை தாக்கல் செய்துள்ளேன். நீதிமன்றத்தில் இருந்து அனுப்பிய வைக்கப்பட்ட ஆவணங்களை பரிசீலனை செய்து அது குறித்த தடய ஆய்வு அறிக்கை மற்றும் அறிக்கைக்கான காரணங்கள் குறித்த ஆவணத்தை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. மேற்படி ஆவணம் என்னிடம் காட்டப்படுவது தான், அது **சா.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. OS No. 92/2021 வழக்கின் பிராதில் கண்ட பழனியப்பன் கையெழுத்துக்களை A1 முதல் A10 வரை குறிப்பிட்டும், OS.No. 55/2014 வழக்கின் பழனியப்பன் தாக்கல் செய்த எதிர்வழக்குரையில் பழனியப்பனின் கையெழுத்துக்களை B1 முதல் B4 வரை குறிப்பிட்டும், 15.07.2013ம் தேதிய பதிவு செய்யப்படாத கிரைய ஒப்பந்த பத்திரத்தில் 2ம் பார்ட்டியாக கையெழுத்து செய்யப்பட்டுள்ள பழனியப்பன் என்பவரது கையெழுத்தை C1 முதல் C4 வரை குறிப்பிட்டும், தடய ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. மேற்படி A1 முதல்

A10, B1 முதல் B4, C1 முதல் C4 வரையிலான கையெழுத்துக்கள் ஒரே நபரால் போடப்பட்டவை என என்னால் கருத்துரை சா.சா.ஆ.2 ல் கொடுக்கப்பட்டுள்ளது.

**<u>பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை</u>** :

பிரதிவாதி ஆஜர். வழக்கறிஞர் ஆஜர் இல்லை. பிரதிவாதி தரப்பு குறுக்குவிசாரணை முடித்து வைக்கப்படுகிறது.

PANDY. R

Digitally signed by PANDY. R
Date: 2026.02.18 14:48:54 +0530